මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2024/EPS/02** **2024.08.26**

# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - 2024

## எல்பிட்டிய பிரதேச சபை

## பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 26 ஆம் பிரிவின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரையும் உப தவிசாளரையும் அதன் உறுப்பினர்களையும் தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் அறிவித்தல், எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரினால் 2024 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேர்தலுக்கான வைப்புப் பணம் கையேற்றல் 2024 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் (இக்காலத்திற்கு இடைப்பட்ட 2024 ஆகஸ்ட் 31, 2024 செப்டம்பர் 01, 07, 08 ஆகிய சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) பெயர் குறித்த நியமனங்களின் கையேற்றல் 2024 செப்டம்பர் 09 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் காலி மாவட்ட செயலகத்தில்/ அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்